www.Padasalai.Net www.CBSEtips.in

FK

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

12 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 45

### பகுதி- அ

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (7 x 1 = 7)

1. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்வதனையே பனுவலின்.....என்கிறோம்.
   அ) மொழிசார் கலை ஆ) கலை முழுமை இ) ஒலிப்பின்னல் ஈ) சொற்புலம்
2. உத்தம சோழன் நடத்தி வரும் திங்களிதழ்
   அ) லோகோபகாரி ஆ) கிழக்கு வாசல் உதயம் இ) கர்மயோகி ஈ) சூரியோதயம்.
3. பிழையான தொடரைக் கண்டறிக.
   அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
   ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
   ஈ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது.
4. கம்பர் தம் நூலிற்கு இட்ட பெயர்
   அ) இராம சரிதம் ஆ) கம்பராமாயணம் இ) கம்ப நாடகம் ஈ) இராமாவதாரம்
5. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) உரிமை தாகம் | - | 1)சாகித்திய அகாதெமி |
| ஆ) அஞ்ஞாடி | - | 2) பூமணி |
| இ) ஜலாலுத்தீன் ரூமி | - | 3)பக்தவச்சல பாரதி |
| ஈ) தமிழர் குடும்ப முறை | - | 4)பாரசீகக் கவிஞர் |

   அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 4, 2, 1 ஈ) 1, 3, 4, 2
6. கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்ப முறையைப் பற்றிக் கூறியவர்
   அ) ஔவையார் ஆ) ஒக்கூர் மாசாத்தியார் இ) பொன்முடியார் ஈ) பேரெயின் முறுவலார்
7. வையகமும் வானகமும் ஆற்றல் அரிது - எதற்கு?
   அ) செய்யாமல் செய்த உதவி ஆ) காலத்தினால் செய்த உதவி
   இ) பயன்தூக்கார் செய்த உதவி ஈ) தினைத்துணை நன்றி

### பகுதி- ஆ

கீழ்க்காணும் வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடை எழுதுக.

அ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி. (8 x 2 = 16)

8. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது '- எவ்வாறு?
9. மஸ்னவி என்பதன் பொருள் யாது?
10. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது என எவற்றைத் திருவள்ளுவர் கூறுகிறார்?

ஆ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி

11. கவிதையின் நடையியல் கூறுகளில் மிக முக்கியமானவையாக தி.சு.நடராசன் கூறுபவை எவை?
12. பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள முன்னணி நாடுகள் யாவை?
13. புக்கில், தன்மனை- சிறு குறிப்பு எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

இ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி

14. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
அ) போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.
ஆ) சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

15. ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.
அ) செல்லிடத்து ஆ) தனியாழி

16. சல சல, வந்து வந்து, கல கல, விம்மி விம்மி இவற்றில் இரட்டைக்கிளவித் தொடர்களை எழுதி அவற்றை எழுதும் முறையைக் கூறுக.

17. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. கலை, களை, கழை.

18. உவமைத் தொடரைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.
அ) அச்சாணி இல்லாத தேர்போல ஆ) உள்ளங்கை நெல்லிக்கனிபோல.

## பகுதி - இ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடை எழுதவும் (3 x 4 = 12)

அ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை யளி

19. மழைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

20. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

ஆ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை யளி

21. ஒலிக்கோலம் சங்கப் பாடல்களில் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

22. பேரிடர்க் காலங்களில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக நடுவணரசு அமைத்த தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் பற்றி எழுதுக.

இ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி

23. பொருள் வேற்றுமையணி (அல்லது) ஏகதேச உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக

24. இலக்கிய நயம் பாராட்டுக.

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா! - பாரதியார்

## பகுதி - ஈ

கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடை எழுதவும். (1 x 6 = 6)

25. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

26. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

27. முதல்கல் - சிறுகதையின் வாயிலாக மருதனின் பாத்திரப்படைப்பை விவரிக்க.

## பகுதி - உ

கீழ்க்காணும் பாடலை அடிபிறழாமல் எழுதுக. (1x 4 = 4)

28. "துன்பு உளதுஎனின் "- எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக



Kindly send me your study materials to padasalai.net@gmail.com